# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 329 of 2013

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. வெங்கடாசலம் |
| தந்தை பெயர் | : | திரு. கோவிந்தராஜ் |
| வா.த.சா | : | 1 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 22.10.2025அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1 - மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 14.06.1965-அன்று ஆவண எண்.720/1965 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.த.சா.ஆ.1ன்படி எனது தகப்பனார் கோவிந்தராஜ் 1ம் பிரதிவாதி சுசீலா என்பவருக்கு பழைய சர்வே நெ. 42/7 ல் 11.72 ஏக்கர் நிலத்தில் 3 ஏக்கர் நிலத்தை தான செட்டில்மெண்டு எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

2. நான் இதே நீதிமன்றத்தில் 30/2000 என்ற வழக்கை 1ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்து அதில் மேற்படி பழைய சர்வே நெ. 42/7 ல் சுசீலாவிற்கு 1.75 ஏக்கர் நிலம் மட்டுமே பாத்தியம் என்று வழக்காடினேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு விசாரணைக்கு பிறகு தள்ளுபடியானது என்றால் சரிதான்.

3. மேற்படி தீர்ப்பிற்கு எதிராக கடலூர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.82/2004 தாக்கல் செய்யப்பட்டு எனக்கு ஆதரவாக மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு எதிராக சுசீலா தரப்பில் உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கு எண்.932/2007 தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு 10.11.2010-அன்று அவர்களுக்கு சாதகமாக அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை.

4. அசல் வழக்கு 30/2000-ல் சுசீலா தரப்பில் அவருக்கு வாதி தரப்பு சான்றாவணம் 1ன்படி கிடைக்கப்பட்ட பூரா 3 ஏக்கர் நிலத்தையும் அவர்தான் ஆண்டு அனுபவித்து வருகிறார் என்று வழக்காடினார் என்றால் சரிதான். வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.த.சா.ஆ-1 முதல் 5ஐத்தவிர வேறு ஆவணங்கள் எதுவும் என் வசம் கிடையாது.

5. வா.த.சா.ஆ-1ல் கிடைக்கப்பெற்ற 3 ஏக்கர் நிலம் தற்போது புதிய சர்வே நெ.19/1 என்றாகி ஹெக்.1. ஏர்ஸ் 21½. என பட்டா 1998-ம் ஆண்டு வழக்கின் 3ம் பிரதிவாதி ராஜ்மோகன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பழைய சர்வே நெ. 42/7 ல் மொத்தம் 11.72 ஏக்கரில் வா.த.சா.ஆ-2ன்படி 5 ஏக்கர் 72 செண்டு நிலம் மட்டுமே பாகப்பிரிவினைக்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

6. மேற்படி வா.த.சா.ஆ-2ன்படி எனது தகப்பனாருக்கு 3 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 3 ஏக்கர் நிலத்தை 22.01.1996-அன்று வா.த.சா.ஆ-3ன்படி எனக்கு தான செட்டில்மெண்டு எழுதிவைத்தார் என்றால் சரிதான். எனவே பழைய சர்வே நெ. 42/7 ல் பாகப்பிரிவினை மூலம் எனக்கு கிடைத்த 5 ஏக்கர் 72 செண்டு மற்றும் வா.த.சா.ஆ-3ன்படி செட்டில்மெண்டு மூலம் எனக்கு கிடைத்த 3 ஏக்கர் நிலம் ஆக மொத்தம் 8 ஏக்கர் 72 செண்டு நிலம் எனக்கு உரிமையானது என்றால் சரிதான்.

7. அதுபோக பழைய சர்வே நெ. 43 ல் பாகப்பிரிவினை மூலம் 53 செண்டு நிலம் எனக்கு கிடைத்தது என்றால் சரிதான். பழைய சர்வே நெ. 42/7 மற்றும் பழைய சர்வே நெ. 43 இரண்டும் ஒரே சக்குபந்தியில் உட்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் தென்னை மரங்கள் உள்ளன என்றால் சரிதான். எத்தனை மரங்கள் உள்ளன என்றால் எனக்கு தெரியாது எண்ணிப்பார்க்க வேண்டும். வழக்கு சொத்தில் 340 தென்னை மரங்கள் உள்ளன என்றால் சரியல்ல.

8. வழக்கு சொத்தில் ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் சரிதான். மின் இணைப்பு எண் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அவர் அனுபவத்தில் 1.75 ஏக்கர் நிலம் அனுபவத்தில் உள்ளது. எனது அனுபவத்தில் 1.25 ஏக்கர் நிலம் அனுபவத்தில் உள்ளது. அளந்துபார்த்தால்தான் தெளிவான விஸ்தீரணம் தெரியவரும்.

9. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தை அளந்து பார்த்து 1ம் பிரதிவாதிக்கு 1.75 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியும், எனக்கு 1.25 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி நீதிமன்றத்தின் மூலம் தரவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 1.25 ஏக்கர் நிலம் யாருக்கு சொந்தம் என்றால் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது. ஆனால் நான்தான் மேற்படி 1.25 ஏக்கர் நிலத்தை அனுபவித்து வருகிறேன். அதனால் எனக்கு அதன்மீது அனுபவ பாத்தியம் ஏற்பட்டுவிட்டது.

10. மேற்படி பழைய சர்வே நெ.42/7ல் நான் அனுபவித்து வருவதாக சொல்லப்படும் 1.25 ஏக்கர் நிலத்தை அவ்வாறு நான் அனுபவித்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் என்வசம் உள்ளதா என்றால் இல்லை. பழைய சர்வே நெ. 42/7 ல் உள்ள 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமான மூன்று ஏக்கர் நிலத்தில் எந்த பகுதியும் எனது அனுபவத்தில் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

11. இந்த வழக்கின் 8ம் பிரதிவாதி ராஜ்மோகன் என்பவர் மேற்படி நிலத்திற்கு மின்இணைப்பு பெற்று அதன் மின்சார இணைப்பு எண்.137.படி அவர்தான் அனுபவத்தில் மொத்த நிலமும் இருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அசல் வழக்கு எண். 30/2000. சென்னை உயர் நீதிமன்றம் வரை வழக்காடி வா.த.சா.ஆ-1ன்படி எனக்கு மேறப்டி வழக்கு எதிராக முடிந்தபிறகும் தவறான காரணங்கள் சொல்லி இந்த வழக்கை நான் தாக்கல் செய்திருப்பது செல்லத்தகுந்ததல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் எதுவும் இல்லாததால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.